# கிறித்தவ இலக்கிய வெளியில் மனித மதிப்பீடுகள்

## பன்னாட்டுக் கருத்தரங்கு

தொகுதி - 3

FATIMA COLLEGE
LEAD KINDLY LIGHT
MADURAI



தமிழ் உயராய்வு மையம்

**பாத்திமா கல்லூரி** (தன்னாட்சி)

மதுரை - 18

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | கிறித்தவ இலக்கிய வெளியில் மனித மதிப்பீடுகள் தொகுதி 3 |
| நுவல் பொருள் | : | கிறித்தவ இலக்கியக் கட்டுரைகள் |
| பதிப்பாசிரியர்கள் | : | முனைவர் ஆ.பாப்பி கமலாபாய், துறைத்தலைவர்<br>முனைவர் சி. அருள் மைக்கேல் செல்வி<br>முனைவர் இரா. டயானா கிறிஸ்டி<br>முனைவர் இரா. ஏஞ்சல்<br>திருமதி பி. திவ்யா<br>திருமதி டே. ஆனி மரிய ஜான்சி |
| பதிப்பு | : | முதற் பதிப்பு, செப்டம்பர் 2018 |
| மொழி | : | தமிழ் |
| உரிமை | : | தமிழ் உயராய்வு மையம்,<br>பாத்திமா கல்லூரி (தன்னாட்சி)<br>மதுரை - 18. |
| பக்கங்கள் | : | |
| அச்சிட்டோர் | : | ரேகா பிரிண்டர்ஸ் |
| நூல் அளவு | : | டெம்மி |
| நூல் வெளியீடு | : | தமிழ் உயராய்வு மையம்,<br>பாத்திமா கல்லூரி (தன்னாட்சி)<br>மதுரை - 18 |
| விலை | : | Rs. 300/- |
| Name of the Book | : | Kirithava Ilakia Veliyil Manitha Mathipedugal<br>(Part III - Research Articles) |
| Print | : | First print - September 2018 |
| Language | : | Tamil |
| Copy Right | : | Tamil Research Centre, Fatima College (Autonomous),<br>Madurai -18. |
| Pages | : | |
| Press | : | REGA Printers |
| Released by | : | Tamil Research Centre,<br>Fatima College (Autonomous), Madurai -18. |
| Price | : | Rs 300/- |
| ISBN | : | 978-93-87865-06-8 |

# பொருளடக்கம்

## காப்பியம்


| வ. எண் | பெயர் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|---|
| 1. | திருமதி இலக்கியா, சோ. | இரட்சண்ய மனோகரத்தில் அருள் வாழ்வியலுக்கான மனித மதிப்பீடுகள். | 1 |
| 2. | திருமதி சலோமி இராஜரீகம், சே. | தேம்பாவணியில் மனித மதிப்பீடுகள் | 5 |
| 3. | திருமதி பிரியா, பா. | அருள்நிறை மரியம்மை காவியம் காட்டும் மனிதநெறிகள் | 8 |
| 4. | செல்வி மகேஸ்வரி, வே. | இரட்சணிய யாத்திரிகத்தில் மதிப்புகள் | 12 |
| 5. | மணிப்பிரியா, ரா. | நீர் வரம் அடைந்த படலம் வழி அறியலாகும் மதிப்பீடுகள் | 15 |
| 6. | வசுமதி, சி. | தேம்பாவணியில் நீர் வரம் அமைந்த படலம் | 18 |
| 7. | செல்வி விஷ்ணுபிரியா, சு. | சேதையோன் படலத்தில் இறைமாண்புகள் | 22 |
| 8. | ஜாஸ்மின் பிரியா, மா. | வளன் சனித்த படலத்தில் மனித மதிப்பீடுகள் | 27 |
| **சிற்றிலக்கியம்** | | | |
| 9. | முனைவர் அருள் மைக்கேல் செல்வி, சி. | கித்தேரியம்மாள் அம்மானை வழி அறியலாகும் வாழ்வியல் மதிப்பீடுகள். | 31 |
| 10. | அல்போன்ஸ் சிந்தியா, அ. | கித்தேரியம்மாளின் மனித மாண்புகள் | 35 |
| 11 | ஆனந்தி, க. | திருக்காவலூர் கலம்பகம் சுட்டும் வாழ்வியல் அறம் | 38 |
| 12. | திருமதி சரஸ்வதி, கு.செ. | கிறித்துவச் சிற்றிலக்கியங்கள் | 42 |
| 13. | முனைவர் சுஜா, ச.அ. | திருக்காவலூர் கலம்பகச் சிறப்பு | 46 |
| 14. | திருமதி திவ்யா, பி. | மடுமாதா அம்மானையில் குடும்பத்திற்கான மதிப்பீடுகள் | 50 |
| 15. | முனைவர் தேவ்மாலா, ஆ. | திருக்காவலூர்க் கலம்பகத்தில் அறம் | 53 |
| 16. | முனைவர் ஹென்றி ஜுலியஸ், பெ. | கித்தேரியம்மாள் அம்மானையும் அறவியல் பேருண்மைகளும் | 57 |
| 17. | முனைவர் ஷர்மி, ஆ. | கிறித்துவ இலக்கியத்தில் சமுதாயச் சிந்தனைகள் | 62 |

# கித்தேரியம்மாள் அம்மானை வழி அறியலாகும் வாழ்வியல் மதிப்பீடுகள்

**முனைவர் சி. அருள் மைக்கேல் செல்வி**
உதவிப்பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம்
பாத்திமா கல்லூரி (தன்னாட்சி), மதுரை

**முன்னுரை**

மேன்மைகள் பல பெற்ற ரோம் நகரின் இத்தாலி நாட்டில் பிறந்து வளர்ந்த வீரமாமுனிவர் 1710ஆம் ஆண்டு சமயப் பணி ஆற்றத் தம் 30ஆம் வயதில் லிஸ்பனிலிருந்து புறப்பட்டார். மதுரை, மறவநாடு, காமநாயக்கன்பட்டி, மலையடிப்பட்டி, ஆவூர், கூனம்பட்டி, கூறைப்பட்டி போன்ற இடங்களில் தங்கிப் பணியாற்றினார். சமயப் பணியோடு தமிழ்ப்பணியும் ஆற்றிய முனிவர் செய்யுள், உரைநடை, அகராதி, இலக்கணம், மொழிபெயர்ப்பு ஆகியவற்றை அன்னைத் தமிழுக்கு அளித்துள்ளார். அவர் படைத்துள்ள 'கித்தேரி அம்மாள் அம்மானை' என்ற நூலில் வீரமாமுனிவர் இடம்பெற்றுள்ள வாழ்வியல் மதிப்பீடுகள் குறித்துக் காண்பது இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

**அம்மானை**

விவிலிய உண்மைகளைச் சொல்ல, கிறித்துவின் வரலாற்றைக் கூற, கிறித்தவக் கொள்கைகளைப் பரப்பக் கிறித்தவ அம்மானைகள் எழுதப்பட்டன. இறைமைந்தன் இயேசு, மரியாள், புனிதர்கள் விவிலிய நூலில் இடம்பெற்றுள்ள சான்றோர்கள் ஆகியோரின் வரலாற்றையும் தலவரலாற்றையும் பாடுபொருளாகக் கொண்டு பாடப்பெற்ற கிறித்தவ அம்மானைகள் 80-க்கும் மேலாக உள்ளன.

கிறித்தவருள் மேலான புண்ணிய வாழ்க்கை வாழ்ந்தவரும் கிறிஸ்துவின் நற்செய்திக்காகத் தன் இன்னுயிரை ஈந்தவரும் மெய்ப்பிக்கப்பட்ட நிலையில் திருச்சபையால் புனிதர் எனப் போற்றப் பெறுவது மரபாகும். திருச்சபையானது அத்தகையோரைத் திருநிலைப்படுத்தி அவர்களுக்கு வணக்கம் செலுத்தவும் அவர்களின் வழி இறையருளைப் பெறவும் தம் மக்களைத் தூண்டுகிறது. அவ்வகையில் கிறித்தவ வாழ்வில் ஏற்படும் துன்பங்களைத் தாங்கிக் கொண்டு தோல்வியில் வெற்றி காண கித்தேரியம்மாளின் வாழ்வை முன் மாதிரியாகக் கொண்டு படைக்கப்பட்டுள்ள நூல் கித்தேரியம்மாள் அம்மானை ஆகும். 1101 தொடைகள், 36 விருத்தங்கள் கொண்டு இவ் அம்மானை அமைந்துள்ளது. பாயிரம் நீங்கலாகப் பிறப்புக் காதை முதல் புதுமைக்காதை வரை 10-க் காதைகளைப் பெற்றுள்ளது. இவ் அம்மானை கூறும் வாழ்வியல் மதிப்பீடுகள் பல ஆகும். அதில் உலகோர் பின்பற்ற வேண்டிய அறங்களும் கூறப்பட்டுள்ளன.

**உலகியல் அறம்**

வீரமாமுனிவர் ஏலாக்குறிச்சிக்குப் பணி செய்ய வந்த காலகட்டம் பஞ்சம், கொள்ளைநோய், அரசியல் போராட்டம் ஆகியவற்றால் தமிழகச் சூழல் பாதிக்கப்பட்டிருந்தது. மறுசீராக்கச் சபையில் சேர்ந்த பலரைக் கத்தோலிக்கத் திருமறைக்கு அழைத்துவர எண்ணிய வீரமாமுனிவருக்கு உறுதியான உள்ளமும் நிலைகுலையாத வாழ்வும் கொண்ட கித்தேரியின் வரலாறு பேருதவியாக இருந்தது. இந்த அம்மானை வழியாகப் பல்வேறு கருத்துக்களை எடுத்துரைத்த முனிவர் நிலையான உலகின் நிலையற்ற செல்வங்கள் ஒழியும் என்னும் கருத்தையும் மக்கள் உணருமாறு எடுத்துரைத்தார். அவ்வகையில், பிறப்புக் காதையில், தேவ அருள் இல்லாதவர்கள் சீரும் பேரும் பெருகி உயர்ந்தாலும் அவர்களின் செல்வம் எல்லாம் பஞ்சு போலப் பட்டு ஒழியும். அவர்களின் பொருள் நலம், பாய்பரி, போர்க்கரி, தேரும் நன்னூல் தெருள் நலம் ஆகிய அனைத்தும் கெட்டு அழியும். நல்லவையும் தீயவை ஆகும். நல் அமுதும் நஞ்சாகும் என்கிறார். இதனை,

**"தேவ அருள் ஒன்று இல்லாதார் சீர் பெருகப் பேர் உயரப்**
**பூ அருளும் செல்வம் எலாம் பூளையினும் பட்டு ஒழியும்**
**பொருள்நலமும் பாய்பரியும் போர்க்கரியும் தேரும் நன்னூல்**